MR. SPEAKER : Do you want to suggest any new colour?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I just want to tell the Hon. Minister that the change of colour is not necessary. We will be only incurring extra expenses. I have seen some buses plying with the colour ' blue ' and with the name ' Pallava Pokkuvarathu Kazhagam '. But the Hon. Minister has said that the colour has not been changed. I have seen otherwise. Will he verify the fact again?

அர்ச்சனைகளுக்கு சீரான கட்டணங்கள்

** 314 வினா—***திரு. என். கிட்டப்பா :** *மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—*

தமிழகத் திருக்கோவில்களில் அர்ச்சனை டிக்கட்டுகளின் கட்டணத் தொகையை எல்லாக் கோவில்களிலும் ஒரே விதமாக நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

பழனியில் பஞ்சாமிர்தம் விற்பனை நிலையம்

** 315 வினா—***திரு. என். கிட்டப்பா :** *மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—*

பழனியில் பஞ்சாமிர்தம் தயாரித்து விற்பனை செய்யும் நிலையம் ஒன்றை அறநிலையத்துறை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : பழனியாண்டவனுக்கு அபிஷேகம் செய்யும் பஞ்சாமிர்தத்தில் பழனியாண்டவர் சிலையில் இருக்கும் மருந்துச் சரக்கு சேருவதாகப் பக்தர்கள் மிக நம்பிக்கையோடு கூறுகிறார்கள். இதை ஆராய்ந்து அறிய குழு ஒன்று நியமித்து அப்படியிருக்குமானால் அரசாங்க மருத்துவ மனைகளில் அதைப் பயன்படுத்துவது பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தற்போது ஆலயத்தின் சார்பில் பஞ்சாமிர்தம் தயார் செய்யப்பட்டு வருகிறது. தரிசிக்க வருகிற பொதுமக்கள் இதை வாங்கிப் பாராட்டுகிறார்கள்.

1972 மார்ச் 4]

திரு. அ. பெ. சண்முகசுந்தரம் : பழனியில் விபூதி நிறைய விற்கப்படுகிறது. விபூதி தயாரிக்க அறநிலைய இலாகா முன் வருமா ?

MR. SPEAKER : This is about " panchamirtham ".

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : விபூதியின்மேல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அக்கறை காட்டியதற்காக நன்றி.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஹிந்து ரிலிஜியஸ் என்டோமென்ட்ஸ் டிப்பார்ட்மென்ட் மூலம் இந்தப் பஞ்சாமிர்தத்திற்கு என்று தனிப்பட்ட முறையில் ஒரு டிப்போ ஆரம்பித்தால் அங்கு ஏற்கனவே உள்ள பஞ்சாமிர்த வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால் அவர்களிடமிருந்து கோரிக்கை ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தற்போது அப்படிப்பட்ட கோரிக்கை எதுவும் வரவில்லை. ஆனால் கொஞ்ச நாட்களுக்கு முன்னால் பழனி ஆலயத்தின் சார்பில் அப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று யோசனை செய்தபோது அங்குள்ள வியாபாரிகளும் அதில் பணியாற்றுகிற ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஆட்சேபணை தெரிவித்த காரணத்தினால் நிறுத்தி வைத்தார்கள். தற்போது அப்படிப்பட்ட வேண்டுகோள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தப் பஞ்சாமிர்தத்தின் மேல் பல பக்தர்களுக்கு ஒரு நம்பிக்கை உண்டு, அதை உண்டால் உடல் நலம் பெறும் என்று. ஆகவே சப்-ஸ்டாண்டேர்ட் பஞ்சாமிர்தத்தை அவர்கள் தயார் செய்யாமல் இருப்பதற்கு அறநிலைய பாதுகாப்பு இலாக்கா ஏதாவது ஏற்பாடு செய்யுமா ? அவர்கள் தயாரிக்கிற பஞ்சாமிர்தம் சரியான வகையில் தயாரிக்கப்படுகிறதா என்பதில் அறநிலையப் பாதுகாப்பு இலாக்கா தக்க கவனம் செலுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பஞ்சாமிர்தம் உண்பதால் உடல் நலம் தேறும் என்று அம்மையார் அவர்கள் கூறுகிறார்கள். இப்போது வெளியார் தயாரிக்கும் பஞ்சாமிர்தம் சாப்பிட்டு உடல் நலம் தேறியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

[1972 மார்ச் 4

திரு. சொ. காவேரிமணியம் : பழனியில் அறநிலையத்தின் சார்பில் பஞ்சாமிர்தம் விற்பனை நிலையம் இருக்கிறது என்று சொன்னார்கள். அதேபோன்று ஆறுபடை வீடுகளிலும் துணை விற்பனை நிலையங்கள் தொடங்குவதற்கு ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

புலவர் சி. பழனிசாமி : தனியார் துறையில் திரு ஆவினன் இன்டஸ்ட்ரீஸ் என்ற பெயரால் அரசாங்க உதவி பெற்று பழ ரசங்கள், பஞ்சாமிர்தம் போன்றவைகளைச் சில ஆண்டுகளுக்கு முன்பு தயாரித்து வந்த தொழிற்சாலை நட்டம்—ஏற்பட்டதால் தற்போது மூடிவிட்டார்கள். ஆகவே அந்தப் பஞ்சாமிர்தத் தொழிற்சாலைக்குப் பதிலாக பல குடும்பங்களுக்கு வாழ்வளிக்கிற வகையில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையோ அல்லது ஒரு காகிதத் தொழிற்சாலையோ அறநிலையப் பாதுகாப்பு இலாக்காவின் சார்பில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : பஞ்சாமிர்தம் என்றால் அதில் சில பழவகைகள் சேர்க்கிறார்கள். அதோடு சர்க்கரை, கற்கண்டு, தேன் போன்றவை குறிப்பிட்ட அளவில் சேர்க்கப்படுகின்றன. பல வியாபாரிகள் அவற்றைச் சரிவரச் சேர்க்காமல் சர்க்கரையை பழத்தோடு போட்டு விற்பனை செய்கிறார்கள். இதையாவது கண்டிக்க அறநிலையப் பாதுகாப்பு இலாகா முன்வருமா ? முருகன் சிலையில் அபிஷேகம் செய்யப்பட்டு விற்கப்பட வேண்டும். அது நவபாஷாணத்தினால் உருவாக்கப்பட்ட சிலையாகும். ஆகவே. எல்லாப் பஞ்சாமிர்தமும் ஒழுங்காக அபிஷேகம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட வேண்டும். பஞ்சாமிர்தத்தில் சரியான அளவில் கற்கண்டு, பழவகைகள், தேன், சர்க்கரை போன்றவை சேர்க்கப்படுகிறதா என்பதைக் கவனிப்பதில் அறநிலையப் பாதுகாப்பு இலாக்கா அக்கறை செலுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பஞ்சாமிர்தக் கேள்விக்கு நேரம் அதிகம் அனுமதித்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் வாய் ஊறும் என்று கருதுகிறேன் (சிரிப்பு).

1972 மார்ச் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

(அ) பி.டி. (B.T.) ஆசிரியர்கள் மேற்கொள்ள இருக்கும் உண்ணாவிரதம் குறித்து.

MR. SPEAKER: Thiru K. Subbu, M.L.A., has given notice of an adjournment Motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to discuss a matter of urgent public importance, namely.—

"The serious situation arising out of the proposed hunger strike in front of the Secretariat by the B.T. Teachers of Tamil Nadu following the Statewide mass casual leave applied by them already on 25th February 1972 on the question of injustice done to them by the Second Pay Commission."

Thirumathi T. N. Anandanayaki has also given notice of an Adjournment Motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules regarding the same subject, namely,—

"That the Graduate Teachers of Tamil Nadu applied mass casual leave throughout Tamil Nadu on 25th February 1972 and further announced to undertake relay hunger fast before the Secretariat on March 6th, 7th and 8th to draw the attention of the Government to redress their grievances."

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்கள் அவர்களுக்கு இரண்டாம் ஊதியக் குழுவினால் அளிக்கப்பட்டிருக்கக்கூடிய அநீதியை அரசிடம் பலமுறை எடுத்துரைத்து அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய கல்வி அமைச்சர் அவர்கள் திருச்சியில் பேசும்போது வாக்குறுதிகள் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலைமையில் அவர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பல்வேறு கட்டங்களில் எடுத்துரைத்து 25-ம் தேதி அன்று தமிழகம் பூராவிலும் அவர்கள்